1970 ஏப்ரல் 2]

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : திண்டுக்கல்–மதுரை சாலையின் இடையே ஏரியின் மேற்குக் கரையில் உள்ள நிலங்களும் கொடைக்கானல் ரெயில்வே நிலையத்திற்கு எதிரில் ஏரிப்படுகையில் உள்ள நிலங்களும் தனியார் பட்டா நிலங்களாகக் கருதப்பட்டுள்ளன. ஆகவே செட்டில்மெண்ட்படி 25.02 ஏக்கர் புறம்போக்கு நிலமாக அறிவிக்கப்பட்டது. இந்த நிலைமையிலே அதை எதிர்த்துத் தான் அவர்கள் உயர்நீதி மன்றத்திலே வழக்குப் போட்டார்கள். அதுவும் தள்ளுபடி செய்யப்பட்டிருக்கின்றது.

திருமதி கே. பி. ஜானகியம்மாள்: இந்த நிலங்கள் பொதுமக்களுக்குச் சொந்தமானவை என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். பொது மக்களுக்கு இடையூறு கிடையாது என்றும் சொன்னார்கள். அங்கு அதே பஸ் முதலாளி பம்ப்செட் போட்டு கரும்புத் தோட்டமும் வைத்துச் சொந்தமாகப் பயன்படுத்திக் கொண்டு வருகிறார் என்பது அரசுக்குத் தெரியுமா ? அதைப் பொதுமக்களுக்குச் சொந்தமாக ஆக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: அத்தகைய தகவல் இல்லை. நிலக்கோட்டை ஊராட்சி ஒன்றியப் பகுதியாகத்தான் இது பேணிக் காக்கப் பட்டுவருவதாகக் கூறப்பட்டிருக்கிறது.

பழனி கோயில் திருப்பணி.

* வினா 649—**திரு. வை. சுவாமிநாதன் :** மாண்புமிகு அறநிலைய அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பழனி கோயிலில் திருப்பணி செய்ய தமிழ்நாடு அரசு உத்தேசித்துள்ளதா ?

(இ) ஆம் எனில், இதற்கான மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு ரூபாய் ?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : (அ) பழனி கோயிலில் திருப்பணி செய்வதற்குரிய செயற்குறிப்பு பரிசீலனையில் உள்ளது.

(இ) திரு. என். மகாலிங்கம் தயாரித்த பெருந்திட்டத்தின் படி, செலவு மதிப்பீடு ரூ. 35 லட்சமாகும்.

திரு. வை சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, இந்தப் பணி எப்பொழுது துவங்கப்படும் ? இதற்கு நம்முடைய அரசாங்கம் ஏதாவது பணம் கொடுக்கிறதா அல்லது பழனி தேவஸ்தானத்திலிருந்து பணம் கொடுக்கப்படுகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா: மதிப்பீடு தயார் செய்யப்பட்டு இன்னும் அப்ரூவ் செய்யப்படவில்லை. அந்தக் கோயில் நிதியிலிருந்து இந்தத் திருப்பணிக்கு வேண்டிய பணத்தைத் கொடுப்ப

தாகச் சொல்லியிருக்கிறார்கள் பொதுமக்களிடமிருந்தும் வசூல் செய்யப்படும். மதிப்பிற்குரிய பொள்ளாச்சி மகாலிங்கம் அவர்கள் கூட இதற்காக 1 லட்சம் ரூபாய் தருவதாக வாக்களித்துள்ளார்கள் இந்தத் திருப்பணி வேலை 5 ஆண்டுகள் முதல் 7 ஆண்டுகளுக்கு நடைபெறும் என்று கருதி கோயில் நிதியிலிருந்து ஒவ்வொரு ஆண்டும் 5 லட்சம் கொடுக்கலாம் என்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. அரசாங்கத்தால் கொடுக்கப்பட மாட்டாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

THIRU K. S. KOTHANDARAMIAH : May I know from the Hon. Minister for Religious Endowments whether this Government has prepared a list of temples which are in a deteriorating condition and which require repairs? If so, may I know the number of such temples?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : இந்த அரசாங்கத்தின் மூலமாகத் திருப்பணிகள் செய்யப்படுவது கிடையாது. பூவர் அன்ட் நீடி டெம்பிள்ஸ் என்று சொல்லக்கூடிய வருமானமில்லாத கோயில்களுக்கு ஏதாவது கொடுக்கலாம் என்று கொடுத்துவரப்படுகிறது. அதற்காக அரசாங்கத்தின் மூலம் 4 அல்லது 5 லட்ச ரூபாய் ஒதுக்கப்படுகிறது. அதற்குள்ளாகத்தான் செலவு செய்யப்பட்டு வருகிறது.

வீட்டு மனைக்கு கோயில் நிலங்கள்.

* **வினா 650 திரு. எஸ். அக்னிராஜு :** மாண்புமிகு அறநிலைய அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவில் தரிசு நிலங்களை வீட்டடி மனைகளாக வீடில்லாத ஏழைகளுக்கு விநியோகம் செய்யும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடமிருக்கிறதா?

(இ) ஆம் எனில், விபரமென்ன ?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : (அ) இல்லை.

(இ) இவ் வினாவிற்கு இடமில்லை

திரு. பெ. சீனிவாசன் : கோயிலுக்குச் சொந்தமான காலி இடங்களை ஏழைகளுக்கு இலவசமாக விடாவிட்டாலும் கோயில் சொத்தில் வீடு கட்டி குறைந்த வாடகைக்கு விட அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : கோயில்களில் இருந்து வீடுகளை வாடகைக்கு கட்டி விடலாம். ஆனல் கோயில்களில் அதற்கான நிதி இருக்க வேண்டும். அப்படிப்பட்ட கோயில்கள் ஒரு சிலதான் இருக்கின்றன. வருகின்ற பக்தர்களுக்கு வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டுமென்பதற்காக அதற்கான விடுதிகளையும்